**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 5 ✧ இதழ்-7 ✧ பிப்ரவரி 2023

நிர்வாக ஆசிரியர்
**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு
**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**R. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)
**A. செந்தில்குமார்**



தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org


# யானை வரும் பின்னே! மணியோசை வரும் முன்னே!

**ஊ**திய உயர்வுக்கான பேச்சுவார்த்தை தொடங்குவதற்கே வேலை நிறுத்த அறிவிப்புகள்தான் வித்திட்டிருக்கிறதென்பதை யாரும் மறக்கவும் முடியாது! மறுக்கவும் முடியாதுமென்பதும் உண்மை!

வேலை நிறுத்த அறிவிப்புகளையொட்டி நடைபெற்றிருக்கக் கூடிய சமரசப் பேச்சுவார்த்தைகள் சம்பிரதாயமாக மட்டுமே இருந்துள்ளது என்பதை மெய்ப்பிக்க கூடிய செயல்தான் ஊதிய உயர்வுக்கான முன்வரைவும், பேச்சுவார்த்தைக் குழுவில் அரசு தரப்பிலிருந்து இரு அங்கத்தினர்கள் சேர்ப்பும்!

சமரச பேச்சுவார்த்தையில் மறுத்தவைகள் யாவும் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்!

முன்வரைவு தருவதற்காக தயாரிப்பு பணிக்கு முழு நேரத்தையும் செலவிட்டுக் கொண்டிருக்கிறதாம் வாரியம்!

இடைப்பட்ட காலத்தில் பதவிகளை ஒழித்தல் என்ற மாபெரும் பணி அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

10.10.23ல் வெளியான (Per) CMD TANGEDCO Proceedings No. 06 என்பது 26 பக்கத்திற்கு (Stream Retd of Post) விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

10.10.23ல் (Per) CMD TANGEDCO Proceedings No. 18 வழியாக புதிய கமிட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளது. (இதற்கு முன்னர் ஒரு முறை Non-Distribution Areasக்கு Committee உருவாக்கப்பட்டு தொழிற்சங்கங்களோடு பேசி முடிவெடுத்து தனியாக ஒப்பந்தம் போடப்பட்டது) இக்கமிட்டி திருத்தப்பட்ட பணிச்சுமைகளை ஊதிய உயர்வு குழுவுக்கு அளிக்குமாம். இதுவரை நடைமுறையில் இருந்து வரும் ஊதிய உயர்வு குழுவுக்கு மேலான அதிகாரம் படைத்த கமிட்டிகளா? ஆலோசனை தரும் கமிட்டிகளா? என்பதை பொறுத்திருந்து பார்த்ததால்தான் புரியும்!

தினமொரு செய்தி ஊடகங்கள் வழியே நம்மை வியக்க வைக்கிறது. ஊதிய உயர்வு அறிவிப்பு செய்யப்படும் என்றும், ஆட்குறைப்பு பணி நடைபெறுகிறது என்றும், ஆள்சேர்ப்பு Outsourcing முறையில்தான் என்றும், Assessment பிரிவு இனி இருக்காது என்றும் மற்றும் அதிகாரிகளுக்கு ஊதிய உயர்வு இல்லை என்றும் தங்கள் எண்ணம்போல எழுதுகிறார்கள் அல்லது சொல்வதைச் செய்கிறார்களா? என்று ஜனநாயகத்தின் நான்காவது தூணின் மேல் நமக்கு ஐயப்பாடு மிகுந்து நிற்கிறது!

ஆட்குறைப்பு, அவுட்சோர்சிங், சீரமைப்பு என்ற பெயரில் கட்டமைப்பை சுருக்குதல் போன்ற செயல்கள் நடப்பதுதான் அபாயத்திற்கான மணி! மணியோசையின் பின்னே என்ன நடக்கும் என்பதை புதுச்சேரியில் நடைபெறும் போராட்டத்தைப் பார்த்த பின்னரும் நாம் உணராமல் இருக்க முடியுமா!

குடிசை கோபுரமாகலாம்! கோபுரம் குடிசையாக அனுமதிக்கலாமா? BSNL என்ற நிறுவனம் இருந்த இடம் தெரியாமல் போனதுபோல் நடக்காது என்று சொல்ல முடியுமா?

எதிர்ப்பு என்பது இருப்பைக் காட்டிக் கொள்ள அல்ல! இருப்பதை இழக்காமல் இருக்க வேண்டும் என்பதற்குதான்! தடுத்து நிறுத்திட வேண்டிய பொறுப்பும் கடைமையும் உள்ளதென்பதுதான் நாமடிக்கும் மணி!

ஆனால், நம் காதில் கேட்பதோ அபாயமணி! ஆபத்து சூழ இருப்பதை அறிமுகப்படுத்தும் படலம்தான் அன்றாடம் யானை அசைந்து வந்து கொண்டிருக்கிறது!

***- ஆசிரியர்***

# மாநில செயற்குழு சுற்றறிக்கை

**தோழர்களே! வணக்கம்!**

2023 ஜனவரி 27 மற்றும் 28 இரு நாட்கள் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள ஹோட்டல் அஜந்தாவில் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில செயற்குழு கூட்டம் மாநிலத் தலைவர் தோழர் S. மணிகண்டன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தலைமையுரையில் மின்சார வாரியத்தில் வேலைப்பகிர்வு ஊதிய உயர்வு ஒப்பந்தம் குறித்து நிலவி வரும் சூழல்களையும், பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதையும், குறிப்பிட்டு பேசி நல்ல ஊதியத்துடன் கூடிய ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு நமது இயக்கங்கள் உறுதுணையாக அமைந்திருக்கின்றது என்பது குறித்தும் உரையாற்றினார். மேலும் நமது வலிமையை பயன்படுத்தும்விதமாய் கிளை அமைப்புகள் விரைந்து செயல்பட்டு அமைப்பை மென்மேலும் பலப்படுத்திடும் வகையில் செயற்குழு உறுப்பினர்களின் விவாதம் அமைந்திட வேண்டிய அவசியம் குறித்து பேசினார்.

பொதுச்செயலாளர் உரையில் கடந்த செயற்குழுவிற்கு பின்னர் நடைபெற்ற வேலை அறிக்கையினை முன் வைத்ததில் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தைக்காக வேலை நிறுத்த அறிவிப்பு அதனைத் தொடர்ந்து நிர்வாகம் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு, அகவிலைப்படி கேட்டு காத்திருப்பு போராட்டம், தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து போராட வேண்டிய அவசியம் எழுந்துள்ள நிலைகள், வாரியத் தரப்பில் ஊதிய உயர்வில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் யாவையும் குறிப்பிட்டு பேசினார்.

உயர்நீதிமன்றம் வேலை நிறுத்தத்திற்கு தடைவிதித்துள்ளதால் போராட்டங்கள் ஓய்ந்துவிடாது, என்றும், மேற்கண்ட தடையை விலக்கிட எடுத்து வரும் முயற்சி குறித்தும் விளக்கினார்.

2022ம் ஆண்டிற்கான வரவு செலவு விபரங்கள், உறுப்பினர் பட்டியல் கிளைகளிலிருந்து தாமதமாக வந்து கொண்டிருப்பதை சுட்டிக்காட்டி உரிய நேரத்தில் தலைமைக்கு அனுப்பிட வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டு பேசினார்.

16.10.2022 மற்றும் 09.01.2023ல் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் நாம் முன் வைத்துள்ள கோரிக்கைகளை விளக்கியும் 25.01.2023ல் நடைபெற்ற ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையில் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நிலைபாட்டினை எடுத்துக் கூறியுள்ளதையும் விளக்கினார்.

11 ஒப்பந்தங்களாக மின்சார வாரியத்தில் கடைபிடிக்கப்பட்டு வந்துள்ள பாரம்பரியத்திற்கு எதிரான நிலையில் எச்செயல் நடந்தாலும் தொழிலாளர்களின் உரிமைகளைவிட்டுக் கொடுப்பதில் நாம் முன் நிற்கமாட்டோம் என்கிற உறுதிப்பாட்டினை தெளிவுபடுத்தினார்.

நிலுவைத் தொகையுடன் கூடிய 20% ஊதிய உயர்வு 10, 20, 30 ஆண்டு பணிக்காலத்திற்கான வெயிட்டேஜ் முறையை 1, 2, 3 என்ற அளவில் ஆண்டுயர்வு, இதர சலுகைகளை பேசி முடித்தல், நேரடி நியமனத்தில் Assistant Draughtsmen Typist பதவிகளும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தேர்வு செய்தல், 10000 Gangmanகளை களஉதவியாளர்களாக மாற்றி ஊதிய உயர்வு வழங்கல், தேர்வு செய்து பணியமர்த்தாமல் உயர்வு 5000 Gangmanகளுக்கு

பணியளித்தல், பகுதி நேர சுகாதார பணிக்கு 1000க்கு மேற்பட்ட அலுவலகங்களில் இல்லாமல் இருப்பதை நிரப்புதல், ஒப்பந்த தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துதல், நிர்வாகப் பிரிவில் பணியாற்றுபவர்களுக்கும், தலைமையகத்தில் பணியாற்றுபவர்களுக்கும் ஊதியத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை சரி செய்திடல், செவிலியர் மற்றும் தலைமை வரைவாளர்களுக்கு ஊதிய முரண்பாட்டை சரி செய்திடல் போன்ற எண்ணற்ற கோரிக்கைகளை வாரியத் தரப்பில் பேசியதை செயற்குழுவில் விளக்கமாக எடுத்துக் கூறினார்.

பெற்று வந்துள்ள உரிமைகளை பேணிப் பாதுகாக்கவும், மேலும் உரிமைகள் பெறவும் தொழிற்சங்க இயக்கமாக நாம் எடுத்திட வேண்டிய பணிகளை குறித்தும் கூறினார்.

பொருளாளர் உரையில் 2022ம் ஆண்டுக்கான வரவு செலவு கணக்குகளை விரைவாக முடித்து தலைமைக்கு அனுப்பிட கேட்டுக் கொண்டார். 2022ம் ஆண்டுக்கான நன்கொடை பிடித்தம் செய்யப்பட்டு தலைமை நிதி கட்டுப்பாட்டு அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலின் நகல் அனுப்பிட கேட்டுக் கொண்டதுடன் 2023ம் ஆண்டிற்கான சந்தா வசூல் செய்திடும் பணியினை விரைவாக முடித்திட வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

மாநில செயல் தலைவர், மாநில அமைப்பு செயலாளர் மற்றும் வெளியீட்டு செயலாளர் உரைக்குப் பின்னர் செயற்குழு உறுப்பினர்கள் விவாதம் நடைபெற்றது. இருநாட்கள் நடைபெற்ற விவாதத்திற்குப் பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

## தீர்மானங்கள்

**1) ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் மின்சாரத் தொழிலையும், மின்சாரத் தொழிலாளர்ளையும் பாதுகாக்கும் அளவில் அனைவருக்கும் (Class I to IV) நிலுவைத் தொகையுடன் கூடிய ஊதிய உயர்வு கிடைக்கும் அளவில் சிறப்பான ஒப்பந்தம் ஏற்படுத்திட பேச்சுவார்த்தை நடைபெறும் நேரங்களில் தேவையான முடிவுகளை எடுத்து நடைமுறைப்படுத்திட தலைமை நிர்வாகிகளுக்கு இச்செயற்குழு முழு அதிகாரம் அளிக்கிறது.**

**2) மாநில பொருளாளர் திரு. J.L. பாஸ்டின்ராஜ் 28.02.2023ல் பணி ஓய்வு பெறுவதையொட்டி பாராட்டும் விதமாக 5.3.2023 அன்று கோவையில் அனைத்து கிளைகளும் பாராட்டு விழாவில் பங்கேற்று வாழ்த்திட வேண்டுமென இச்செயற்குழு தீர்மானிக்கிறது.**

**3) மாநில முழுவதும் அனைத்து கிளைகளிலும் நடைபெற்ற செயற்குழு கூட்டங்களில் தலைமை நிர்வாகிகள் கலந்து கொண்டு நிர்வாகிகளை சந்தித்து வாரிய நிலவரங்களை தெரியப்படுத்திட வாய்ப்பளித்து கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த அனைத்து கிளைகளுக்கும் தலைமையின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.**

**4) 2022 டிசம்பரில் வருடாந்திர பொதுக்குழு கூட்டம் நடைபெறாததினால் இச்செயற்குழுவில் நிர்வாகப் பொறுப்பில் சில மாறுதல்களும், புதிய பொறுப்பாளர்களை நியமிப்பதற்கும் இச்செயற்குழு ஒப்புதல் அளிக்கிறது.**

**5) TNEBEF News ஆசிரியர் குழுவில் உள்ள தோழர் S. இராமநாதன் மறைவினையொட்டியுள்ள காலியிடத்திற்கும் திருமதி. V. பாரதி அவர்களின் உடல் நலன் குறித்து பொறுப்பு விடுவிப்பு வேண்டியுள்ளதால் ஏற்பட உள்ள காலியிடத்திற்கும் நியமனம் செய்வதற்கு இச்செயற்குழு ஒப்புதல் அளிக்கிறது.**

6) மின்சார வாரியம் அளித்துள்ள ஊதிய உயர்வு முன் வடிவில் தந்துள்ள 5% ஊதிய உயர்வு, Abolition of Post, Out sourcing மற்றும் Class I & II பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு இல்லை என்ற முன் வரவினை ஏற்றுக் கொள்வதில்லையென இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

7) Womens wing Region அளவில் பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் கிளைகளில் அறிமுகம் கூட்டம் நடத்திட கிளை செயலாளர்கள் தேவையான நடவடிக்கை எடுத்து தலைமைக்கு தெரிவித்திட வேண்டுமாய் இச்செயற்குழு தீர்மானிக்கிறது. இக்கூட்டத்தில் தலைமை நிர்வாகிகள் கலந்து கொள்வது எனவும் தீர்மானிக்கிறது.

8) கடலூர் மின்திட்ட கிளையின் அமைப்பை வலுப்படுத்திட எடுத்த நடவடிக்கையின் அடிப்படையில் திரு. D. மணிமாறன் அவர்களைச் செயலாளராக கொண்டு தேர்வு செய்யப்பட்டுள்ள புதிய நிர்வாகிகள் அனைவரையும் இச்செயற்குழு வாழ்த்தி வரவேற்கிறது.

9) மாநில உபதலைவர் திரு. R. சக்திவேல் அவர்களது துணைவியார் உடல் நலமற்று மறைந்தமைக்கு இச்செயற்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

10) மின்சார வாரியத்திலிருந்து அரசிற்கு சென்றுள்ள கோப்புகளுக்கான

1. BP2 முழுமையாக இரத்து செய்திடவும்
2. TA to JE 2nd Grade பதவி உயர்வுக்கு மூன்றாண்டுக்கு பதிலாக இரண்டாண்டு பணிக்காலம் தகுதியானது என மாற்றம் செய்திடவும்
3. Gangman பணியாளர்களுக்கு விடுப்பு உள்ளிட்ட சலுகைகள் வழங்கிடவும்
4. Junior Assistant கல்வித் தகுதி 10ம் வகுப்பு படித்திருந்தால் போதுமானது என்பதையும் ஊதிய உயர்வு முன்னர் அரசிடமிருந்து ஒப்புதல் பெற்றிட வேண்டுமாய் மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

11) நேர்முகத் தேர்வுக்கு அரசின் ஒப்புதலுக்கு சென்றுள்ள பதவிகளின் பட்டியலில் Assistant Draughtsman மற்றும் Typist ஆகியவற்றை சேர்த்து தேர்வு நடத்திட வேண்டுமெனவும் இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

12) Head Draughtsmen, Staff Nurse ஆகியோருக்குள்ள ஊதிய வித்தியாசத்தினை (அரசுக்கு இணையாக) சரிபடுத்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

13) தலைமை அலுவலகத்தில் உள்ள Section Officer, Superiendent பதவிகளுக்குரிய ஊதியத்தில் Adm Supervisor மற்றும் Accounts Supervisor வழங்கிடல் வேண்டும், AAdO பதவிகளுக்கு APO, AEEக்குள்ளான ஊதியமும், Admo பதவிகளுக்கு, PO, EEக்குண்டான ஊதியமும், Sr Admo பதவிக்கு, SPO SEக்குண்டான ஊதியமும் வழங்கிடல் வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

14) ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரத்திற்கான பேச்சுவார்த்தையும், பகுதி நேரப் பணியாளர்கள் இல்லாத அலுவலகங்களுக்கு பணியாளர் நியமிப்பதும் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை முடிவுக்கு முன்னர் உறுதிப்படுத்திடல் வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

15) Gangman 5000 தேர்வு பெற்றவர்களை பணியமர்த்திடல் வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

16) உயர்நீதிமன்றம் சென்னை மற்றும் மதுரை கிளைகளில் தேங்கிக் கிடக்கக் கூடிய வழக்குகளை விரைந்து முடிக்க உதவும் வகையில் மண்டல அளவில் சட்டம் பயின்றுள்ளவர்களை புதிய பதவி உருவாக்கி பணியிலமர்த்தி வழக்குகளை விரைந்து முடிவடையச் செய்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

17) ERP பணிகளுக்கான முறையான பயிற்சி அளித்திடல் வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

18) மின்கம்பங்களில் கட்டி பயன்படுத்தும் கேபிள் TV வயர்களை அப்புறப்படுத்திட உத்திரவிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

19) மின்சார வாரியத்தில் தொடரும் மின்விபத்துகளை தடுப்பதற்கு பாதுகாப்பு வகுப்பு (Safety Class) நடத்திட வேண்டுமென்றும், தரமான தளவாடப் பொருட்கள் மின்கம்பம் உட்பட கொள்முதல் செய்து வழங்கப்பட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

20) TNEB Retired Employees & Officers Federation பதிவுக்கான பணிகள் முடிந்தவுடன் பொதுக்குழு நடத்தி நிர்வாகிகள் தேர்வு செய்வதென இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

21) புதிய நிர்வாகிகளாக
திரு. K.R. சுப்பிரமணியன், மாநில உபதலைவர்
திரு. K. செல்வராஜ், மாநில செயலாளர்
திரு. K. தயாநிதி, மாநில இணை செயலாளர்
திரு. S. முருக அருள், மாநில இணை செயலாளர்
திரு. R. கிருஷ்ணன், மாநில இணை செயலாளர்
திரு. R. வீரசேகர், மதுரை மண்டல செயலாளர்
திரு. V. பாண்டியன், திருவண்ணாமலை மண்டல செயலாளர்
திரு. M. ஜானகிராமன், காஞ்சி மண்டல செயலாளர்
திரு. M. தண்டபாணி, கரூர் மண்டல செயலாளர்
திரு. V. கனகராஜ், தஞ்சை மண்டல செயலாளர்

ஆகியோரை ஏகமனதாக தேர்வு செய்கிறது.

22) TNEBEF News ஆசிரியர் குழுவில் திரு. K. நாராயணமூர்த்தி மாநில அமைப்பு செயலாளர், திருமதி. V. சிவராணி, மாநில இணை செயலாளர் ஆகியோரை இணைத்திடுவது என இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

செயற்குழு முடிவுகளை நடைமுறைப்படுத்திட தேவையான ஆலோசனைகளுடன் கூடிய தலைவர் முடிவுரையுடன் செயற்குழு இனிதே நிறைவுற்றது.

நன்றி!

தோழமையுள்ள,

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

# TNEBEF - செயற்குழு தீர்மானங்கள் - வாரியத்திற்கு கடிதம்

நாள் : 31.01.2023

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில செயற்குழு தீர்மானங்கள் - தெரிவிப்பது தொடர்பாக.**

2023 ஜனவரி 27 மற்றும் 28 இரு நாட்கள் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள ஹோட்டல் அஜந்தாவில் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில செயற்குழு கூட்டம் மாநிலத் தலைவர் தோழர் S. மணிகண்டன் அவர்கள் தலைமையில் நடைபெற்றதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை தக்க மேல் நடவடிக்கைகளுக்காக தங்களது மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

**1) மின்சார வாரியம் அளித்துள்ள ஊதிய உயர்வு முன் வடிவில் தந்துள்ள 5% ஊதிய உயர்வு, Abolition of Post, Out sourcing மற்றும் Class I & II பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு இல்லை என்ற முன் வரவினை ஏற்றுக் கொள்வதில்லையென இச்செயற்குழு தீர்மானிக்கிறது.**

**2) மின்சார வாரியத்திலிருந்து அரசிற்கு சென்றுள்ள கோப்புகளுக்கான**

1. **BP2 முழுமையாக இரத்து செய்திடவும்**
2. **TA to JE 2nd Grade பதவி உயர்வுக்கு மூன்றாண்டுக்கு பதிலாக இரண்டாண்டு பணிக்காலம் தகுதியானது என மாற்றம் செய்திடவும்**
3. **Gangman பணியாளர்களுக்கு விடுப்பு உள்ளிட்ட சலுகைகள் வழங்கிடவும்**
4. **Junior Assistant கல்வித் தகுதி 10ம் வகுப்பு படித்திருந்தால் போதுமானது என்பதையும் ஊதிய உயர்வு முன்னர் அரசிடமிருந்து ஒப்புதல் பெற்றிட வேண்டுமாய் மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

**3) நேர்முகத் தேர்வுக்கு அரசின் ஒப்புதலுக்கு சென்றுள்ள பதவிகளின் பட்டியலில் Assistant Draughtsman மற்றும் Typist ஆகியவற்றை சேர்த்து தேர்வு நடத்திட வேண்டுமெனவும் இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.**

4) Head Draughtsmen, Staff Nurse ஆகியோருக்குள்ள ஊதிய வித்தியாசத்தினை (அரசுக்கு இணையாக) சரிபடுத்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

5) தலைமை அலுவலகத்தில் உள்ள Section Officer, Superiendent பதவிகளுக்குரிய ஊதியத்தை Adm Supervisor மற்றும் Accounts Supervisor பதவிகளுக்கு வழங்கிடல் வேண்டும், AAdO, பதவிகளுக்கு APO, AEEக்குள்ளான ஊதியமும், Admo பதவிகளுக்கு, PO, EEக்குண்டான ஊதியமும், Sr Admo பதவிக்கு, SPO SEக்குண்டான ஊதியமும் வழங்கிடல் வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

6) ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரத்திற்கான பேச்சுவார்த்தையும், பகுதி நேரப் பணியாளர்கள் இல்லாத அலுவலகங்களுக்கு பணியாளர் நியமிப்பதும் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை முடிவுக்கு முன்னர் உறுதிப்படுத்திடல் வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

7) Gangman 5000 தேர்வு பெற்றவர்களை பணியமர்த்திடல் வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

8) உயர்நீதிமன்றம் சென்னை மற்றும் மதுரை கிளைகளில் தேங்கிக் கிடக்கக் கூடிய வழக்குகளை விரைந்து முடிக்க உதவும் வகையில் மண்டல அளவில் சட்டம் பயின்றுள்ளவர்களை புதிய பதவி உருவாக்கி பணியிலமர்த்தி வழக்குகளை விரைந்து முடிவடையச் செய்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

9) ERP பணிகளுக்கான முறையான பயிற்சி அளித்திடல் வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

10) மின்கம்பங்களில் கட்டி பயன்படுத்தும் கேபிள் TV வயர்களை அப்புறப்படுத்திட உத்திரவிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

11) மின்சார வாரியத்தில் தொடரும் மின்விபத்துகளை தடுப்பதற்கு பாதுகாப்பு வகுப்பு (Safety Class) நடத்திட வேண்டுமென்றும், தரமான தளவாடப் பொருட்கள் மின்கம்பம் உட்பட கொள்முதல் செய்து வழங்கப்பட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தை கேட்டுக் கொள்கிறது.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## நான்மணிக்கடிகை பாடல். 09 | தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை!

### கள்வமென் பார்க்குந் துயிலில்லை

**கள்வமென் பார்க்குந் துயிலில்லை காதலிமாட்டு**
**உள்ளம்வைப் பார்க்குந் துயில்லை; ஒண்பொருள்**
**செய்வமென் பார்க்குந் துயிலில்லை; அப்பொருள்**
**காப்பார்க்கும் இல்லை துயில்.**

**சந்தி பிரித்து எழுதிய பாடல்:**

கள்வம் என்பார்க்கும் துயிலில்லை; காதலிமாட்டு
உள்ளம் வைப்பார்க்கும் துயிலில்லை; ஒண்பொருள்
செய்வம் என்பார்க்கும் துயிலில்லை; அப்பொருள்
காப்பார்க்கும் இல்லை துயில்.

**கருத்துரை:**

திருடுவதற்காக ஊர் அரவம் அடங்கும் வரைக் காத்திருப்பார்க்கும் உறக்கம் வாராது!

காதலில் கட்டுண்டுக் காதலியின் இடத்தில் மனத்தைப் பறிகொடுத்தவர்களுக்கும் உறக்கம் வாராது! நிறைந்த செல்வம் சேர்க்க வேண்டும் என்று கருதி இராப் பகலாய் உழைப்பவர்களுக்கும் உறக்கம் வாராது!

அதுபோல், சேர்த்த பொருளை, களவாலும், பிறவற்றாலும் கெடாதபடிக் காப்பவர்களுக்கும் கவலையால் உறக்கம் வாராது!

**அருஞ்சொற்பொருள்:**

கள்வம் என்பார்க்கும் = திருடுவம் என்று மக்கள் சோர்ந்திருக்கும் நேரம் பார்ப்பார்க்கும்; காதலி மாட்டு = காதலியினிடத்தில்; உள்ளம் வைப்பார்க்கும் = விருப்பம் வைத்திருப்பார்க்கும்; ஒண்பொருள் = சிறந்த செல்வப் பொருளை; செய்வம் என்பார்க்கும் = பெருக்குவம் என்று கருதி உழைப்பார்க்கும்; அப்பொருள் = தேடிய அப்பொருளை; காப்பார்க்கும் = களவாலும் பிறவாற்றாலும் கெடாதபடிப் பாதுகாப்பவர்கட்கும்; துயில் இல்லை = உறக்கம் பிடிப்பதில்லை.

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
✆ : 9841446621 : 8939152361
tnebemployeesfederation3600@gmail.com

**குறிப்பு :** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

# 2023 ஜனவரி 10 வேலை நிறுத்த அறிவிப்பு

நாள் : 22.12.2022

1958-ம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்தகராறு விதிகள்
விதி 59(1)-ன் கீழ்
படிவம் ''ஓ''
**(Form "O")**

## பொதுப் பயன் துறையில் வேலை நிறுத்தம் செய்வதற்காக தொழிற் சங்கத்தால் வழங்கப்படுகின்ற வேலை நிறுத்த அறிவிப்பு படிவம்

| | | |
|---|---|---|
| தொழிற்சங்கத்தின் பெயர் | : | **தமிழ்நாடு எலக்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் (Tamilnadu Electricity Board Employees Federation)** |
| வேலை நிறுத்த அறிக்கை தர தொழிலாளர்களால் அதிகாரம் பெற்றுள்ள ஏழு பிரதிநிதிகள் | | |

1. **S. மணிகண்டன்** — மாநிலத் தலைவர்
2. **A. சேக்கிழார்** — பொதுச்செயலாளர்
3. **J. லூர்து பாஸ்டின் ராஜ்** — பொருளாளர்
4. **K. நாராயணமூர்த்தி** — அமைப்புச் செயலாளர்
5. **R.G. லெனின் சீனிவாசன்** — மாநில செயலாளர்
6. **N. பழனி** — மாநில செயலாளர்
7. **K. சம்பத்** — மாநில இணைச் செயலாளர்

| | | |
|---|---|---|
| முகவரி | : | 39/101, சிங்கண்ண தெரு,<br>சிந்தாதிரிப்பேட்டை,<br>சென்னை - 600 002. |
| வேலை நிறுத்த அறிவிப்பு தரும் நாள் | : | 22 டிசம்பர், 2022 |
| பெறுநர் (நிர்வாகம்) | : | செயலாளர்<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்<br>144, அண்ணாசாலை |

ஐயா,

1947ம் ஆண்டு தொழிற் தகராறு சட்டப்பிரிவு 22(1)ன் படி வேலை நிறுத்த அறிவிப்பினை இதன் மூலம் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். சட்டப்பிரிவு 22(1)ன்படி (வேலை நிறுத்தம்) **2023 ஜனவரி 10ம் நாள் செவ்வாய்க்கிழமை** ஒரு நாள் **வேலை நிறுத்தம் 10.01.2023 காலை 6.00 மணி முதல் 11.01.2023 காலை 6.00 மணி** வரையில் 24 மணி நேரம் நடைபெறும்.

1958ம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்தகராறு விதிகளில் விதிஎண் 59-ன் கீழ் வேலை நிறுத்தத்திற்கு தேவைப்படுகின்ற அடிப்படையான விவரங்கள் அடங்கிய பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தங்கள் உண்மையுள்ள

**தொழிற்சங்கம் அளித்துள்ள அதிகாரத்தின்படி**
**தொழிற்சங்க ஏழு பிரதிநிதிகளின் கையொப்பம்**

1. **S. மணிகண்டன்** மாநிலத் தலைவர்

2. **A. சேக்கிழார்** பொதுச்செயலாளர்

3. **J.L. லூர்து பாஸ்டின் ராஜ்** மாநில பொருளாளர்

4. **K. நாராயணமூர்த்தி** மாநில அமைப்பு செயலாளர்

5. **R.G. லெனின் சீனிவாசன்** மாநில செயலாளர்

6. **N. பழனி** மாநில செயலாளர்

7. **K. சம்பத்** மாநில இணைச் செயலாளர்

**பெறுநர் :**

1. **செயலாளர், தமிழ்நாடு மின்சார வாரியம்,** 800, அண்ணாசாலை, சென்னை - 600 002.
2. **செயலாளர், தொழிலாளர் துறை,** தமிழ்நாடு அரசு, சென்னை - 600 009.
3. **தொழிலாளர் ஆணையர்,** தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

**இணைப்பு :**

வேலை நிறுத்தத்திற்கு அடிப்படையான கோரிக்கை பட்டியல்.

## இணைப்பு

(1958-ம் ஆண்டு தொழிற் தகராறு விதிகளில் எண் 59-ன் கீழ்)

**(அ) தொழிற் தகராறுகளுக்கான கட்சிக்காரர்கள்** : 1) தொழிலாளர் தரப்பு
பொதுச் செயலாளர்
தமிழ்நாடு எலக்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்,
39/101, சிங்கண்ண தெரு, சிந்தாரிப்பேட்டை, சென்னை-2.

: 2) நிர்வாகத் தரப்பு
செயலாளர்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
144, அண்ணாசாலை, சென்னை-600 002.

**(ஆ) தொழிற் தகராறுகளின் தன்மை மற்றும் கோரிக்கைகள்** : கோரிக்கைகள் இணைக்கப்பட்டுள்ளது.

**(இ) பாதிக்கப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை** : தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்று கின்ற தொழிலாளர்கள் (கேங்மேன் (பயிற்சி) உட்பட), பொறியாளர்கள், அலுவலர்கள் சுமார் 90,000 மேற்பட்டவர்களும், 10,000-த்திற்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களும், 3,000-த்திற்கும் மேற்பட்ட பகுதி நேர பணியாளர்களும் மற்றும் லட்சத்திற்கு மேற்பட்ட மின்சார வாரிய ஓய்வூதியர்களும், தமிழ்நாட்டிலுள்ள சுமார் 3 கோடிக்கு மேலான மின் நுகர்வோர்களும் நேரடியாக பாதிக்கப்படுகின்றனர்.

**(ஈ) தொழில் தகராறுகளை தீர்ப்பதற்கு எடுத்து கொண்ட முயற்சிகள்** : 1. குறிப்பாக 1.12.2019 முதல் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை தொடர்ந்து நடக்காதது. கேங்மேன் பணியாளர்களுக்குண்டான விடுப்பு மற்றும் சலுகைகளை வழங்கிட உத்தரவிடாதது, 56,000-த்திற்கு மேற்பட்ட காலியிடங்களை பூர்த்தி செய்யாமல் இருப்பது, தொடர் மின்விபத்து உயிர் இழப்புகளை குறைத்திட நடவடிக்கை மேற்கொள்ளாதது போன்ற முக்கியமான பிரச்னைகளின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காததாலும் 12.4.2022ல் வெளியிட்டுள்ள வாரிய உத்தரவு எண். 2 மூலம் பதவி உயர்வு, பதவி அனுமதி, கடன் மற்றும் தொழிலாளர் நலன் காக்க இதுவரை நடைமுறையிலுள்ள உத்தரவுகளுக்கு அரசின் அனுமதியை பெற வேண்டுமென உத்தரவிட்டுள்ளது. உட்பட்ட பல்வேறு கோரிக்கைகள் நிலுவையில் உள்ளது.

மேற்கண்ட கோரிக்கைகள் உட்பட இதர கோரிக்கைகளையும் உள்ளடக்கி கடந்த 2022 ஜுன் 2 அன்று வேலை நிறுத்தம் செய்திட எங்களது சங்கத்தின் சார்பாக அறிவிப்பு தந்து தொழிலாளர் நல ஆணையர் அலுவலகத்தில் சமரச பேச்சுவார்த்தை பல கட்டங்களில் நடந்து வரும் நிலையில், மின்சார வாரியத்தில் உள்ள பெரும்பான்மையான சங்கங்கள் இதே கோரிக்கைகளை வலியுறுத்தி 2023 ஜனவரி 10ல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளதால் கூட்டுப் பேரத் தன்மையை வெளிப்படுத்தி பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வர வாரியத்தையும், அரசையும் வலியுறுத்தி இவ்வேலை நிறுத்தத்தை எங்களது சங்கத்தின் சார்பாக முன் வைக்கிறோம்.

பொதுச் செயலாளர்

## கோரிக்கைகள்

1) மின்சார வாரியத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர், அலுவலர், பொறியாளர் (I to IV) அனைவருக்கும் 01.12.2019 முதல் ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும். மேலும் அகவிலைப்படி மத்திய அரசு மாநில அரசுக்கு அறிவிக்கும் போதெல்லாம் மின்சார வாரியத்திற்கு வழங்கிட வேண்டும்.

2) BP2ஐ முழுமையாக ரத்து செய்திட வேண்டும்.

3) பதவிகளை குறைப்பதும், காலியிடங்களை ஒழிப்பதும், அவுட்சோர்சிங் செய்திட Redeployment உத்திரவிடுவது போன்ற செயல்களை நிறுத்திடல் வேண்டும்.

4) மின்சார சட்ட திருத்த மசோதாவை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தால் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் பொதுத்துறையாக மின்துறை இருக்காது. எனவே, மத்திய அரசு தாக்கல் செய்திடாமல் தடுத்திட வேண்டும்.

5) 2010ம் ஆண்டு மின் சீரமைப்புக்காக வெளியிடப்பட்ட அரசாணை 100ன்படி மின்சார வாரியத்தில் பணியாற்றுபவர்கள் ஓய்வு பெற்றவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்க அரசின் உத்தரவாதம் கூடிய முத்தரப்பு (12(3) ஒப்பந்தம் ஏற்படுத்திட வேண்டும்.

6) காலியிடங்கள் Field Assistant, Technical Assistant, Assessor, Junior Assistant, Assistant Engineer, Assistant Draughtsman ஆகிய பதவிகள் சுமார் 56,000 காலியிடங்கள நிரப்பிடல் வேண்டும்.

7) புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியமே தொடர வேண்டும்.

8) கேங்மேன் தொழிலாளர்களுக்கு விடுப்பு உள்ளிட்ட இதர சலுகைகளை அளிக்க அனுப்பப்பட்டுள்ள கோப்புக்கு அரசு ஒப்புதல் அளித்திடல் வேண்டும்.

9) 10,000க்கு மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் தொடர்ந்து பணி செய்து வருகிறார். தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி நிரந்தரம் செய்திட வேண்டும்.

10) 1000 அலுவலகங்களுக்கு மேல் பகுதி நேரப் பணியாளர்கள் இல்லாத நிலை உள்ளது. ஊதியமின்றி பணி செய்து கொண்டிருப்பவர்களை நிரந்தரம் செய்திடல் வேண்டும்.

பொதுச் செயலாளர்

## தலைமை பொறியாளர்களின் செயல்திறனை பரிசீலனை செய்ய குழு அமைத்து உத்திரவு

**(ABSTRACT)**

Establishment - TANGEDCO - Review of performance of all Chief Engineers/ Headquarters, TANTRANSCO, Projects, Distribution Regions and Thermal Stations - Constitutions of Committee - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per) CMD TANGEDCO Proceedings No. 1,** **Dated 04th January, 2023**
Margazhi-20,
Thiruvalluavar Aandu-2053.

*****

**PROCEEDINGS:**

It has been decided to constitute a Committee to review the performance of all Chief Engineers/Headquarters, TANTRANSCO, Projects, Distribution Regions and Thermal Stations, as per Regulation 17 (g) of TNEB Service Regulations.

2. Accordingly, it is hereby ordered that a Committee be constituted with the following officers as Members of the Committee to review the performance of all Chief Engineers/ TANGEDCO & TANTRANSCO.

i) Managing Director / TANTRANSCO

ii) Director / Projects / TANGEDCO

iii) Director / Generation / TANGEDCO

iv) Chief Engineer / Personnel / Administrative Branch

3. The Committee is directed to submit its report within a period of one month.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**A. MANIKKANNAN**
Secretary

# உணவே மருந்து...

குறள்: அற்றால் அறவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு.

**து**ரித வாழ்வின் நெரிசலில் ''எந்த பொத்தனை எதற்கு அமுக்க வேண்டும்? என்ற ஒரே பாடத்தை எல்லாம் உயர்ந்த படிப்பிலும் பயிற்சியிலும் படிக்கத் துவங்க, பெரிதாகப் பெற்ற அறிவில் இன்று நாம் தொலைத்தவையும் இழந்தவையும் ஏராளமானவை. அப்படி நாம் தொலைத்தவையும், இழந்தவையும் கொடுத்துதான் இந்த சர்க்கரை, ரத்தகொதிப்பு, ரத்தகொழுப்பு, மாரடைப்பு, புற்றுநோய், மன இறுக்க நோய்கள் முதலான தொற்றா நோய் கூட்டத்தின் (Non communicable Diseases) துவக்கப்புள்ளிகள்.

கொஞ்சம் மெனக்கெடலும், சமையலறையில் கூடுதல் கரிசனமும் முறையான மருத்துவத்துடன் சேர்ந்து இருந்தால் மட்டுமே இந்த நோய்க்கூட்டத்தில் இருந்தும் அந்த நோய்க்கான மருந்து/ மருத்துவர் கூட்டத்தில் இருந்தும், தப்பிக்கலாம்.

உணவு ஒரு மாபெரும் வணிகச்சந்தைக்கான களமாக ஆன பின்னர், அதன் அத்தனை கூறுகளும் வேக வேகமாக சிதைக்கப்பட்டு வருகின்றன. உணவுக் கட்டமைப்பை கைப்பற்றுகூதன் மூலம் ஓர் அரசைக் கட்டுப்படுத்த முடியும். அதன் இறையாண்மையை சிதைக்க முடியும் என்பது வளர்ந்த நாடுகளின் போர் அணுகு முறையாகவும் கூட ஆகிவிட்டது.

இன்னொருபுறம், வணிக சிந்தனையை மட்டுமே அடித்தளமாகக் கொண்டு மருத்துவ உலகம் உணவுக் கலாச்சாரத்தைச் சிதைப்பதும், அதற்கு உதவியாக தவறான தகவல்கள் மூலமும் வணிக திட்டங்கள் மூலமும் மருத்துவ உலகை வசப்படுத்தி மக்களை திசை திருப்பும் வேலையும் வேக வேகமாக நடைபெற்று வருகின்றன.

காலகாலமாக நம்மிடையே உள்ள அரிசி பழிக்கப்படுவதும், தேங்காய் எண்ணெய் குற்றம் சாட்டப்படுவதும் இந்த காரணங்களால் தான். ரெடிமேட் உணவுகளின் பிடியில் ஒவ்வொரு வீடும் கட்டுவதற்கு மருத்துவகாரணமும், மேற்கத்திய தரமும் மிக உறுதியான காரணங்களாக தொடர்ந்து போதிக்கப்படுகின்றன. இந்தச் சூழலில் நம் பாரம்பரிய உணவு குறித்த விழிப்புணர்வு மிக அவசியமானது. அவற்றை மீட்டெடுக்க வேண்டியதும் இன்றியமையாதது.

**நீரிழிவு நோய்க்கான உணவு**

இனிப்பு மற்றும் பாலிஷ் செய்யப்பட்ட தானியங்களின் அதிகப்படியான உபயோகம், உணவு பண்பாட்டில் நடக்கும் ஒழுங்கின்மை மன அழுத்தம், உடல் உழைப்பு குறைவு இவைதாம் இன்றளவில் நீரழிவு வர முக்கிய காரணங்கள்.

சர்க்கரையின் முதல் எதிரியாக சித்தரிக்கப்படுவது அரிசி அதில் பெரும் உண்மையில்லை. இயற்கையில் விளைந்த பாரம்பரிய கைக்குத்தல் அரிசி ரகங்கள் பெரும்பாலும் குறைந்த கிளைசிமிக் தன்மை உடையன. வேகமாக ரத்தத்தில் சர்க்கரையை சேர்க்காதவை. பட்டை தீட்டிய, வெள்ளை நிற சில்க்கி பாலிஷ் போட்டு விற்பனை செய்யும் உணவை தவிர்த்திடுங்கள்.

தரைக்கு அடியில் விளையும் கிழங்குகள், குறிப்பாக உருளைக்கிழங்கு தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. கேரட்டும், பீட்ரூட்டும் தவிர்த்திடுங்கள். கோவைக்காய், கத்திரிக்காய், அவரை பிஞ்சு, வெண்டைக்காய், கொத்தவரங்காய், டபுள்பீன்ஸ், வாழைத்தண்டு, வாழைப்பூ, சுண்டை வற்றல், முருங்கைக்கீரை, கொத்தமல்லி, புதினா இவை எல்லாம் சர்க்கரை நோயாளிக்கு மிகுந்த நல்ல பலன் அளிக்கக் கூடியவை. பாகற்காய் சர்க்கரை நோயாளியின் சிறந்த நண்பன்.

நாருள்ள இனிப்பு குறைவாகவும், துவர்ப்பு அதிகமாகவும் உள்ள பழங்கள் தினசரி சாப்பிடுவது நல்லது. மாம்பழம், சப்போட்டா, மோரிஸ் வாழைப்பழம், துவர்ப்புள்ள நம்மூர் மாதுளை, இளம் பழுப்பில் உள்ள கொய்யா, தோலுடன் உள்ள ஆப்பிள், நாவல் போன்ற பழங்கள் சர்க்கரை நோயாளிகளுக்கு நல்ல பலன் அளிக்கக் கூடியவை.

நன்றி!

**இந்து ராஜேஷ்குமார்**
தலைமைப்பொறியாளர் அலுவலகம்/ பகிர்மானம்/
கோவை மண்டலம்/ கோவை

# வலிகளுடன் வரலாற்றையே மாற்றியமைத்த உலக நாயகன் மெஸ்ஸி

**கா**லத்திற்கும் சிறந்த வீரனாக தன்னை மாற்றிக் கொண்ட லியோனல் மெஸ்ஸி, கடந்து வந்த பாதை இலகுவானதாக இருக்கவில்லை. பல சவால்களையும், வீழ்ச்சிகளையும் கடந்து மீண்டும் எழுந்து தற்போது உலகமே விரும்பும் ஒரு நாயகனாக மாற்றியுள்ளார் மெஸ்ஸி.

அர்ஜென்டினாவில் தன் பெற்றோருக்கு மூன்றாவது பிள்ளையாக பிறந்த மெஸ்ஸி, வெறும் 4 வயதிலேயே அருகிலுள்ள தனது உள்ளூர் ''அபான்டராடோ கிராண்டோலி'' என்ற கிளப்பில் கால்பந்து விளையாட தொடங்கினார்.

**மெஸ்ஸியின் திறமையை கண்டறிந்த பாட்டி செலியா:**

மெஸ்ஸி தனது குழந்தை பருவத்தில் தன்னுடைய சகோதர்களும், மற்றவர்களும் விளையாடுவதை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார். அப்போது அவர்களுடன் விளையாடும் ஒரு சிறுவன் வராத நிலையில் அவருக்கு பதிலாக மெஸ்ஸியை விளையாட சேர்த்து கொள்ளுமாறு மெஸ்ஸியின் பாட்டி கூறியபோதுதான், முதன் முதலில் புட்பாலை எட்டி உதைத்து விளையாடினார் மெஸ்ஸி அப்போது சிறப்பாக விளையாடிய மெஸ்ஸியை கண்டு அவருக்குள் ''பிறவியிலேயே கால்பந்து விளையாட்டு இருக்கிறது'' என்று வியந்த அவருடைய பாட்டி தொடர்ந்து அவரின் திறமையை வளர்க்கும்விதமாகவே உள்ளூர் கிளப்பில் சேர்த்து கொள்ளுமாறு சொன்னார். ஆனால், பயிற்சியாளர் ''இவன் மிகவும் சிறியவனாகவும், உயரம் குறைவானவனாகவும் இருக்கிறான்'' என்று மெஸ்ஸியை சேர்க்க மறுத்தார். அதற்கு மெஸ்ஸியின் பாட்டி ''அவனை களத்தில் இறக்குங்கள். உங்கள் போட்டியை அவன் காப்பாற்றி தருவான்'' என்று தொடர்ந்து வற்புறுத்தியதை அடுத்து பயிற்சியாளர் மெஸ்ஸியை களமிறக்கினார். அந்த போட்டியில் இரண்டு கோல்களை அடித்தார் மெஸ்ஸி.

1994ஆம் ஆண்டு நியுவெல்ஸ்ஒல்டு பாய்ஸ் என்ற கிளப் அணிக்காக தனது 7 வயதிலிருந்து 13 வயது வரை ஆறு வருடங்கள் விளையாடினார் மெஸ்ஸி. அந்த அறுவருடங்களில் 176 போட்டிகளில் 234 கோல்களை அடித்திருந்தார். மெஸ்ஸி 9 வயது இருக்கும் போது, கிளப் அணியின் மருத்துவர் ஸ்வார்ஸ்டீன், மெஸ்ஸிக்கு வளர்ச்சியில் குறைபாடு இருப்பதை கண்டுபிடித்தார். அதை அவர்களிடம் சொல்வதற்கு முன்பாக ஒரு அழைப்பு வந்தது. அதில் பேசியவர்கள் மெஸ்ஸியை காண்பித்து 'எங்களிடம் உள்ள சிறந்த வீரர் இவர்' என்று மருத்துவரிடம் சொன்னார்கள். மருத்துவர் சற்று நிதானித்தார். உண்மையில் அந்த மருத்துவர் ஸ்வார்ஸ்டீனின் மருத்துவமனைக்கு முதன் முதலில் சென்றபோது மெஸ்ஸிக்கு 9 வயதுதான் ஆகியிருந்தது. அங்கு அவருக்கு பாதிப்பு உறுதியான நாள் ஜனவரி 31,1997. அன்றைய தேதிக்கு வளர்ச்சி ஹார்மோன் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட 20,000 உலக மக்களில் மெஸ்ஸியும் ஒருவர். அவர் நியுவெல்ஸ்யுடன் இணைந்திருப்பது 4'0'' உயரத்திற்கு சற்று அதிகமாக இருந்தார். அதாவது அவரது இலக்கு உயரத்திற்கும் 15.20 சென்டிமீட்டர் குறைவாகும் இவை அனைத்தையும் ஆலோசித்த மருத்துவர், மெஸ்ஸியின் இந்த பிரச்சினை குணப்படுத்த கூடியது எனவும், அவரது உடல் சாதாரணமான வளர்ச்சிக்குரியதாகதான் இருப்பதாகவும் அனைவரிடமும் தெரிவித்தார்.

ஓடி விளையாட வேண்டிய வயதில் தன்னுடைய கால்களுக்கு ஊசியை செலுத்தி கொண்டு விளையாடினார் மெஸ்ஸி ஒவ்வொரு நாளும், மெஸ்ஸி ஒரு சிறிய சிரஞ்ச் மூலம் வளர்ச்சி ஹார்மோனை சுயமாக செலுத்தி கொள்வார்.

மெஸ்ஸிக்கு 6 வயது இருக்கும்போது, பள்ளிகளுக்கு இடையிலான கால்பந்து தொடரில் மெஸ்ஸியின் பள்ளி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. அந்த போட்டியின் போது, எதிர்பாராதவிதமாக மெஸ்ஸி, பாத்ரூமில் மாட்டிக்கொள்ள, கதவு தானாகவே திறக்க முடியாமல் லாக் ஆனது. மெஸ்ஸி எவ்வளவோ கத்தியும் யாருக்கும் கேட்கவே இல்லை பின்னர் மெஸ்ஸி இல்லாமலேயே ஆட்டம் தொடங்கியது. ஆனால், பொறுத்து பொறுத்து பார்த்த மெஸ்ஸி, பாத்ரூம் ஜன்னலை உடைத்து கொண்டு வெளியே வந்து, பேட்டி நடைபெறும் கிரவுண்டிற்கு கடைசி 20 நிமிடங்கள் இருக்கும் போது சென்றார். மாற்று வீரராக உள்ளே நுழைந்த மெஸ்ஸிக்கு, அந்த குறைவான நிமிடங்களே ஹாட்ரிக் கோல்களை அடிக்க போதுமானதாக இருந்தது. ஆம் கடைசி நேரத்தில் 3 கோல்களை மெஸ்ஸி அடிக்க இறுதிப்போட்டியில் வெற்றி பெற்றது மெஸ்ஸியின் அணி.

உருவம் சிறியவனாக இருப்பதாக ஒதுக்கப்பட்ட ஒரு சிறுவன் காலத்திற்கும் சிறந்த வீரனாக தற்போது உயர்ந்து நிற்கிறான் சாதிப்பதற்கு உருவமோ, நிறமோ, அழகோ தேவையில்லை. கடின உழைப்பு மட்டுமே ஒருவனை உயர்த்தும் என்பதற்கு மெஸ்ஸியின் வாழ்க்கையே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

**P. நாகராஜன், M.E.,**
மாநில இணைச் செயலாளர்,
தொழில்நுட்பம்

---

## குடி குடியைக் கெடுக்கும்!

**– சிவநாச்சியார்**

**துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்பார் கள்ளுண் பலர். (குறள் 926)**

நாம் தண்ணீரையும் குடிக்கின்றோம், பாலையும் குடிக்கின்றோம். ஆனால், எதையும் குடி என்று அழைப்பதில்லை. மதுவை மட்டும் தான் குடி என்கிறோம் ஏன்? தண்ணீரையும் பாலையும் குடிப்பதால் உடலுக்கும் சமுதாயத்துக்கும் எந்த ஒரு தீமையும் இல்லை. ஆனால், மது குடிப்பதை மட்டும் தவறு என்று சொல்கிறோம். ஏனென்றால், மது வீட்டுக்கும், நாட்டுக்கும், உயிருக்கும் கேடு விளைவிக்கின்றது. மது குடிப்பதால் மது குடிப்பவர்கள் தன்னிலை மறந்து விடுகிறார்கள். எது ஒன்று தன்னிலை மறக்க செய்கிறதோ அது ஆபத்தான விஷயம். அதைத்தான் போதை என்று அழைக்கின்றோம்.

மது அருந்துவதை பற்றி திருவள்ளுவர் கள்ளுண்ணாமை என்ற அதிகாரத்திலே மது குடிப்பதால் உண்டாகும் ஏற்படும் தீமைகள் பற்றி விரிவாக கூறியுள்ளார். குடிப்பதில் சில வகை உண்டு தினந்தோறும் குடிப்பது, எப்போதாவது நண்பர்களுடன் ஒன்று கூடும்போது சந்தோஷத்திற்காக மகிழ்ச்சிக்காக குடிப்பது. ஏதாவது ஒரு பிரச்சனை ஏற்பட்டால் அந்த பிரச்சினையில் இருந்து விடுபட அல்லது மறக்க குடிப்பது. பொதுவாக எந்த ஒரு தேவையில்லாத கெட்ட பழக்கத்தையும் தானாக சொந்த பணத்தை செலவழித்து கற்றுக் கொள்வதில்லை. ஏதோ ஒரு நபரின் தூண்டுதல் பேரிலோ அல்லது நண்பர்களின் சகவாசத்தினாலோ இலவசமாக அதாவது ஓசியிலே கற்றுக் கொள்கிறார்கள்.

குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களின் இல்லங்கள் பொதுவாக பெரிதான பொருளாதார முன்னேற்றம் இருக்காது. காரணம் சம்பாதிக்கும் பணத்தில் பெருமளவு குடிப்பதற்காகவே செலவழிக்கிறார்கள். குடிக்கும் பெற்றோரால் (தந்தையால்) குழந்தை தொழிலாளர்கள், சாலை விபத்துக்கள் இன்னும் பல சொல்ல முடியாத சமூக

சீரழிவுகள் உருவாக காரணமாகிறது. மது அருந்துபவர்கள் பொதுவாக சொல்லும் காரணம் தனது மனவேதனையை மறக்க மது அருந்துகிறோம் என்று ஏதோ ஒரு காரணத்தை தேடிப் பிடித்துக் கூறுவார்கள். வளர்ந்து வந்து கொண்டிருக்கிற மேலைநாட்டு கலாச்சாரத்தால் ஆண்கள் மட்டுமன்றி பெண்கள் மது அருந்தும் நிலை ஆங்காங்கே தென்படுவதைக் காண முடிகிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். வியாபார நோக்கில் மதுபானக் கடைகள் மக்கள் நெருக்கம் மிகுந்த குடியிருப்பு, வணிக வளாகங்கள், ஆலயங்கள், பேருந்து தொடர் வண்டி நிலையங்கள் அருகிலுள்ள இடங்களிலும் அமைந்த காரணத்தால் அனைவரும் இதை உபயோகிக்க வேண்டும் என்ற எண்ணத்தை தூண்டுவதாக அமைகிறது. சிறார்கள், மாணவர்கள் கூட உட்கொள்ளுதலில் விதிவிலக்கானவர்கள் அல்ல என்று எண்ணுகிற அளவில் பரவலான விற்பனை மக்களிடம் மையம் கொண்டுள்ளது.

சோமபானம், சுராபானம் காலந்தொட்டு கேளிக்கையில் மயங்கிய காலம் மறைந்து அதிகாலை 4 மணிக்கே கடைவாயிலில் வாங்குவதற்காக காத்திருக்கும் அவலநிலை மேலோங்கியிருக்கின்றது. பண்டிகை காலங்களில் விற்பனையின் இலக்கை திட்டமிட்டு விற்பனை செய்வதை யாரும் கண்டிப்பதற்கும் இல்லாத நிலை உள்ளது. குடிப்பவர்கள் மட்டுமல்ல விற்பவர்களும் திருந்திட வேண்டிய அவசியம் இருக்கிறது. அரசாங்கமே மது விற்பனையில் அதிக இலாபத்தோடு இயங்கிக் கொண்டுள்ளது. பொதுவாக மது குடிப்பவர்களை குடிகாரன் என்று தான் அழைப்போம். ஆனால், மது விற்பனை செய்யும் அரசாங்கமோ மது அருந்துவர்களை **'மது பிரியர்கள்'** என்று கௌரவமான பெயரால் அழைக்கிறார்கள். பொதுவாக இல்லற வாழ்வில் தலைவன் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டால் அந்த குடும்பமே சீரழிந்து விடும் என்பது நிதர்சனமான உண்மை. மது குடிப்பதால் அறிவு மயங்கிப் போகும். சுயபுத்தி இருக்காது மது, அருந்துவது நஞ்சு உண்டதற்கு சமமாகும். குடிப்பதால் பயம், சோர்வு, விரக்தி, படபடப்பு, தனிமையே விரும்புவது போன்றவை உண்டாகும். மேலும் உடல் நலம், மனவளம் இரண்டுமே பாதிக்கும். அப்படிப்பட்ட இந்த குடிப்பழக்கத்தை மாற்ற சில வழிகளும் உண்டு.

எந்த ஒரு பழக்கத்திற்கும் நாம் அடிமையாகிவிடக் கூடாது. மனம் சொல்வது போன்று நாம் கேட்பது எப்போதும் நமக்கு நன்மை அளிப்பதாகவே இருக்கும். பெரும்பாலும் புலன் மயக்கத்திலேயே நாம் செயல்பட்டுக் கொண்டுள்ளோம் அதன் புலன் இன்பத்திற்காகதான் நாம் தன்னை மறந்து இருப்பதற்கு ஏதோ ஒரு பழக்கத்தை நாம் கடைபிடித்து கொண்டுள்ளோம் அவ்வாறு அந்த பழக்கத்திற்கு அடிமையாவது பெரும்பான்மையோர்கள் உண்டு. மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. குடிப்பழக்கத்தையும் மாற்று வழியில் சரி செய்யலாம் என்று கூறுவார்கள்.

